# இலங்கையில் கம்யூனிச எதிர்ப்பு!

REGD. No. M. 6311 PHONE No. 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

| | | |
|---|---|---|
| தனி இதழ்: ஒரு அணு<br>இலங்கையில் 10 சதம் | சென்னை: ஆவணி 23உ புதன் (8—9—54)<br>வெளியூர்: ஆவணி 24உ வியாழன் (9—9—54) | மலர்: 2<br>இதழ்: 74 |


# மதுரை தி.மு.க. தோழர்கள் விடுதலை

## ஜாமீன் வழக்கில் தீர்ப்பு

மதுரை, செப். 7—

மதுரைக்கு நேரு வந்திருந்த சமயம் அவருக்குக் கருப்புக் கொடி பிடித்ததாகவும், அதையொட்டி ஏற்பட்ட கலவரம் சம்பந்தமாகவும், மதுரை நகர் திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் தோழர் என். முத்து, எம். அய்யாச்சாமி உட்பட 29 பேர்கள் மீது, போலீசாரால் தொடரப்பட்ட ஜாமீன் வழக்கு, கடந்த ஒரு வருட காலமாக மதுரை நகர் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நடைபெற்று வந்ததில், இன்று, மேற்கண்ட தோழர்களின் மீது ஜாமீன் பத்திரம் வாங்குவதற்கு எவ்வித காரணமும் இல்லையாது என்று கூறி, மேற்கண்ட தோழர்கள் 29 பேர்களையும் நகர முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் திரு. ஏ. அரைராஜ் பி.ஏ., பி.எல்., இன்று பிற்பகல் விடுதலை செய்தார்.

இந்த வழக்கில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், மதுரை வழக்கறிஞர்கள் டி. தர்மராஜ் சந்தோஷம் எம். ஏ., பி. எல்., எஸ். பார்த்தசாரதி பி. ஏ., பி. எல்., கு. ஆதமுசம் பி. ஏ., பி. எல்., ஆர். சொக்கலிங்கம், பி. ஏ., பி. எல்., முதலியோர் வாதாடினர்கள்.

இந்த வழக்கில் சம்பந்தப்பட்டிருந்து, இன்று விடுதலை செய்யப்பட்ட தோழர்கள் விவரம்:—

எஸ். முத்து, எம். அய்யாச்சாமி, எம். ஆர். கணேசன், கே. எஸ். ராஜமாண், மணிமுடி, ரத்தினம், தங்கராஜ், செந்திக்குமார், மாயக்காளை, மகமது, க. நடராசன், குமாரசாமி, மல்லயாள மணி; கனகு, பாண்டி, பிச்சை, அழகர், கோவிந்தன், சங்கையா, பெருமாள், கண்ணன், கந்தசாமி, பேச்சிமுத்து, பாலுரத்தினம், சந்திரசேகரன், அழகர்சாமி, வேலாயுதம், சீனிவாசன் ஆகியோர்களாவர். (ச-கி)

★

மதுரை நகரில் அமைதியை சீர்குலைக்கும் விதத்தில் நடந்து கொண்டதாக இ. பு. கோ. 107-வது பிரிவின்படி மதுரை இளைஞர் காங்கிரசைச் சேர்ந்தவர்கள் உட்பட 24 தோழர்கள் மீது தொடரப்பட்ட வழக்கில் அனைவரையும் விடுதலை செய்து, நகர முதல்தர மாஜிஸ்திரேட் தீர்ப்பளித்தார்.

இந்த எதிரிகள் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுடன் தனித்தனியாகவும், சேர்ந்தும் சண்டை போட்டார்களென்றும், இவ்விதம் 1953-ல் எட்டுச் சந்தர்ப்பங்களில் அமைதிக்குப் பங்கம் விளைவித்தார்களென்றும், அதில் கடைசிச் சம்பவம் மதுரைக்கு பண்டித நேரு வந்தபோது நடந்ததென்றும் பிராசிகியூஷன் தரப்பில் கூறப்பட்டது.

## லிமாயி — ராஜினமா

### பி.—சோ. கட்சி கலைகிறது!

புதுடில்லி, செப். 8—

பிரஜா—சோஷலிஸ்ட் கட்சியின் கூட்டுக் காரியதரிசியான மது லிமாயி தனது பதவியை இராஜினமா செய்துவிட்டார்.

அதுபோல், தேசிய நிர்வாகக் கமிட்டி உறுப்பினர் பதவியிலிருந்து பலேஷ்வர் விலகிவிட்டார்.

டாக்டர் லோகியாவின் நிலையைத் தாம் பெரும்பாலும் ஆதரிப்பதாக லிமாயி நிருபர்களிடம் கூறினர்.

திரு—கொச்சியில், பி.-சோ. சர்க்கார், தமிழர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த பின்னர், பி.-சோ. கட்சியின் தலைமைப் பீடத்திலிருந்து மூன்று பேர் இராஜினமா செய்துள்ளார்கள்.

#### பட்டம் டில்லி செல்கிறார்

திரு—கொச்சி முதல் அமைச்சர் பட்டம் தாணு பிள்ளை, செப். 13-ந் தேதி பறந்து டில்லி செல்கிறார். இந்திய சர்க்காருடன் சில முக்கிய விஷயங்கள் பற்றிக் கலந்து பேசுவார் என்று தெரிகிறது.

அப்போது பட்டம் தாணு சில இந்தியத் தலைவர்களைச் சந்தித்து, துப்பாக்கிப் பிரயோகம் பற்றி எடுத்துரைப்பார் என்று தெரிகிறது.

## 'சீட்டோ' கையெழுத்தாகும்

### பாகிஸ்தான் தயங்குகிறது

மணிலா, செப். 7—

தென் கிழக்கு ஆசிய நாடுகள் பாதுகாப்பு ஒப்பந்தத்தில், எழு நாடுகள் கையெழுத்திடும் என்று தெரிகிறது.

பாகிஸ்தான் இதில் கையெழுத்திடுவதில் தயக்கம் காட்டுகிறது.

பாகிஸ்தான் சர்க்காரின் முடிவை ஜபருல்லாகான் எதிர்பார்க்கிறாராம்!

## ரஷ்யா மீது அமெரிக்கா புகார்!

நியூயார்க், செப். 7—

சென்ற சனிக்கிழமை யன்று சைபீரியக் கரையில், அமெரிக்க ரோந்து விமானமொன்றை ரஷ்ய விமானம் காரணமின்றி தாக்கியதாக ஐ. நா. பாதுகாப்பு சபையிடம் அமெரிக்கா புகார் தாக்கல் செய்திருக்கிறது.

பாதுகாப்பு சபை அநேகமாக வெள்ளிக்கிழமை யன்று கூடலாம் என்று தெரிகிறது.

## லிஸ்பன் தட்டிக்கழிக்கிறது!

### கோவா பேச்சுவார்த்தை நிராகரிப்பு!

புதுடில்லி, செப். 7—

கோவா பற்றி இந்திய சர்க்காருக்கும், போர்ச்சுகீசிய சர்க்காருக்கும் இடையே இன்று ஆரம்பமாக இருந்த பேச்சு வார்த்தைகள் நடைபெறவில்லை.

போர்ச்சுக்கல் சர்க்காரின் போக்கினால்தான் இப்பேச்சுவார்த்தைகள் நடைபெறவில்லையாம்!

பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்க செப். 7-ந் தேதியைக் குறிப்பிட்டு இந்தியா அனுப்பிய குறிப்புக்கு, போர்ச்சுக்கல் சர்க்காரிடமிருந்து இன்னும் பதில் வரவில்லை.

இதற்குப் பதிலாக, போர்ச்சுகீசியத் தூதுவர் நேரில் வந்து தமது சர்க்காரின் கருத்தை இந்திய சர்க்கார் வெளிநாட்டு இலாகா காரியதரிசி என். ஆர். பிள்ளையிடம் தெரிவித்தார் என்று தெரிகிறது.

பிரச்சினையை இந்தியா தட்டிக் கழிப்பதாக லிஸ்பன் சர்க்காரின் அறிக்கை ஒன்று கூறுகிறது.

## பெண்களின் திருமண வயது 18 ஆகியது

புதுடில்லி, செப். 7—

தனித் திருமண மசோதாவின் கீழ் பெண்களுக்கான திருமண வயதை 18 ஆகவும், ஆண்களின் வயதை 21 ஆகவும் நிச்சயித்து இந்திய மக்கள் சபை தீர்மானித்தது.

இதனை ஆதரித்து 118 பேரும், எதிர்த்து 106 பேரும் வாக்களித்தனர் என்று தெரிகிறது.

இதனை எதிர்த்து பண்டித நேருவும், ஆதரித்து ஜெகஜீவன் ராமும வாக்களித்தனர் என்று தெரிகிறது.

இப்பிரச்சினையில் கட்சிக் கட்டுப்பாடு இன்றி காங்கிரஸ் உறுப்பினர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர் என்று தெரிகிறது.

## கொத்தலவாலையின் அச்சம்

### தென் இந்தியா கம்யூனிஸ்டுகளின் கையில் சிக்குமாம்!

### நேருவிற்குப் பின்னர் நிலைமை மாறும்

## தென் இந்தியா சிங்களத் தீவு மீது படையெடுக்குமென்கிறார்!

### தற்காத்துக் கொள்ள 'சீட்டோ'வில் சேரலாம் என்கிறார்

"இந்தியப் பிரதமர் பண்டிதருக்குப் பின்—மனிதராய்ப் பிறந்தவர்கள் இறப்பது என்றாவது ஒருநாள் நிச்சயம்தானே—'சிவப்பாக' மாறிக் கொண்டிருக்கிற தென்னிந்தியா, இலங்கை மீது படை எடுத்தால், 3 லட்சம் மக்கள் தொகையுடைய இலங்கை, அந்தப் படையெடுப்பை எதிர்த்துச் சமாளிக்க முடியுமா? எனவே, இலங்கைக்கு, என்றும் ஆதரவு தருகிற நண்பர்கள் அதற்குத் தேவை; இதனாலேயே காமன்வெல்த் கூட்டுறவை எத்தனை காலம் வைத்துக்கொள்ள முடியுமோ, அத்தனை காலமும் இலங்கை வைத்துக்கொள்ளும்.

"இலங்கைக்கு, ஒரு படையெடுப்பினின்றும் பாதுகாப்பைத் தரும் வகையில். கம்யூனிச ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கு மட்டுமின்றி. 'சீட்டோ,' விரிவுபடுத்தப்பட்டு, கம்யூனிஸ்டு அல்லாத நாடுகளின் மீதும் நடவடிக்கை மேற்கொண்டால், தானும் அந்தக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்க முடியும் என்ற பாகிஸ்தானின் கொள்கையை நாம் ஏற்றுக்கொள்ளக்கூடும். அந்த அடிப்படையில் 'சீட்டோ' அமைக்கப்பட்டு, பயன் தரக்கூடியதாயிருந்தால் பல நாடுகளும் 'சீட்டோ'வில் சேரலாம்; இலங்கையும் அதில் சேரும்,"

என்று, இலங்கைப் பிரதமர் சர் ஜான் கொத்தலாவலை இலங்கை மக்கள் சபையில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:—

"சர்தார் கே. எம். பணிக்கர், 'நேருவின் குரல்' எனக் கருதப்படுபவர்; அவர் எழுதியுள்ள புத்தகம் ஒன்றில், 'திரிகோணமலை இந்தியாவின் பாதுகாப்பை உத்தேசித்து இந்தியாவுக்குத் தேவை என்றும், இந்தியா ஒரு தகப்பனாகவும், பர்மாவும், இலங்கையும் இரண்டு பிள்ளைகளாகவும் இருக்க வேண்டும்,' என்றும் எழுதியுள்ளார்.

இத்தகைய 'பிதோபதேசங்கள்,' நமக்குத் தேவை இல்லை; திரிகோணமலை நம் உபயோகத்திற்காக நமக்குத் தேவை," என்றார்.

'சீட்டோ'வைப் பற்றி கொத்தலாவலை குறிப்பிட்டதாவது:—

"சீட்டோவின் முழு நோக்கமும் இப்போதுதான் தெரிய வருகிறது; முன்பு தெளிவில்லாது இருந்த அதன் அமைப்புக்கான அடிப்படை இப்போது தெரிவிக்கப்படுகிறது; பாகிஸ்தான் வெளியிட்டுள்ளதைப் போன்று, 'சீட்டோ,' கம்யூனிச எதிர்ப்புக்கு மட்டுமின்றி விரிவுபடுத்தப்பட்டால், 'சிவப்பாகி' வரும் தென்னிந்தியப் படையெடுப்பினின்றும் நம்மைப் பாதுகாத்துக்கொள்ள 'சீட்டோ'வில் சேரலாம்," என்று குறிப்பிட்டார்.

## ஆயுள் முழுதும் சிறை தண்டனை!

### கென்யாட்டா அனுபவிப்பார்!

"மாவ் மாவ் இயக்கத்தை நடத்தியதாகத் தண்டிக்கப்பட்ட ஜோமோ கென்யாட்டாவும், 4 ஆப்பிரிக்க சுதேசித் தலைவர்களும், 7 ஆண்டு காலம் சிறைவாசம் முடிந்த பின்னர், வெகு தூரத்திலுள்ள எல்லை மாகாணத்தில், சர்க்கார் குறிப்பிடும் இடத்தில், காலவரையறையின்றி காவலில் வைக்கப்படுவார்கள்," என்று கென்யா கவர்னர், சுதேசித் தலைவர்களின் கூட்டமொன்றில் கூறினர்.

## திப்ருகரில்...

### அவசர நிலைமை பிரகடனம்

### மக்கள் வெளியேற்றம்

பிரம்மபுத்திராவில் பெருமளவு வெள்ளம் ஏற்பட்டிருப்பதின் காரணமாக, அசாமின் முக்கிய நகரமான திப்ருகரில் அவசர கால நிலைமை பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. நிலைமை எல்லை மீறிப்போய்விட்டதாம்!

முக்கியப் பகுதிகளில் ஆயுதம் தாங்கிய காவல் படையினர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிகிறது.

மக்களை அவசரமாக வெளியேற்றும் வேலை தொடர்ந்து நடைபெறுகிறது.

பிரசவ விடுதிகளிலிருந்து பெண்களும், குழந்தைகளும் வேறிடத்திற்குக் கொண்டு செல்லப்படுகின்றனர்.

## வி. வி. கிரி ராஜினமா ஏற்கப்பட்டது

புதுடில்லி, செப். 7—

இந்திய சர்க்கார் தொழிலாளர் அமைச்சர் வி.வி. கிரியின் இராஜினமா ஒப்புக் கொள்ளப்பட்டது.

அடுத்த தொழிலாளர் அமைச்சர் யார் என்பது இன்னும் நிச்சயமாகவில்லை.

கிரிக்கு பதிலாக குல்சாரிலால் நந்தா நியமிக்கப்படலாம் என்று தெரிகிறது.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 8—9—54 புதன்

# இப்பக்கம் வந்திடும் இந்தி!

'எப்பக்கம் வருகுது, இந்த இந்தி,' என்று, வீறுகொண்டெழுந்து, அறப்போர் புரிந்த காலம், இன்னும் நினைவிலிருந்து மாறவில்லை!

'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை,' என்று 1937-ல், ஆச்சாரியாரின் ஆதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்டான் தமிழன்!

தாய் மொழிக்கு ஆபத்து என்றவுடன், தாயின்மேல் ஆணையிட்டு, தன்மானப் போரில் நடைபோட்டான்!

கட்டாய இந்தியை நுழைத்த ஆச்சாரியார் திணறினார்; திண்டாடிப் போனார்! 'புற்றீசல் போல கிளம்புகிறதே!' என்று, பொறுக்க முடியாமல் ஆர்ப்பரித்தார்; அடக்குமுறையை ஏவினார்!

அறம் காக்க சூள்கொண்ட தமிழர், போர்க் களத்தில், புறமுதுகிட்டோடினாரில்லை! பெல்லாரி வெஞ்சிறையாயினும், வேலூரில் விலா வெலும்பு முறிய வேலை செய்யச் சொன்னாலும், சிறையை, சிங்காரப் பூஞ்சோலையாகவே கருதினர்! ஆயிரக் கணக்கில் குவிந்தனர்! தாளமுத்து, நடராசனை பலி கொடுத்தனர்!

பெரும் போர் நடந்தி மரணங்காத்தனர்! இரு உயிர்களைக் காணிக்கையாகக் கொடுத்து மொழி காத்தனர்!

வடநாட்டு இந்தி, வந்த வழியே திரும்பியது! தமிழ், மறுமலர்ச்சி பெற்று, நாட்டிலே வளர்ந்தது!

இந்தி எதிர்ப்புப் போரில் முதல் கட்டம் இது! இரண்டாவது கட்டம், பத்தாண்டுகளுக்குப் பின் தொடங்கிற்று; கருஞ்சட்டை அணிந்த வீரர்கள், கலங்கா உள்ளத்தோடு, மறுபடியும் புகுத்தப்பட்ட இந்தியைப் போரிட்டுத் துரத்தினர்; வயிற்றிலே சிசுவைத் தாங்கிய தாய்மார்கள், போலீஸ் லாரிகளிலே ஏற்றிக் கடத்தப்பட்டபோதும் அஞ்சினார்களில்லை!

'எப்பக்கம் இந்தி வந்திடினும் விடோம்,' என்று, வீரப் போர் புரிந்தனர்!

மறுபடியும் தமிழகத்தைப் பிடிக்க இருந்த பீடை ஒழிந்தது!

இருமுறை நடத்தப்பட்ட போராட்டங்களிலும் திராவிட இயக்க முன்னணி வீரர்களின் தியாகங்கள், எழுதின், விரியும்.

அப்படிப்பட்ட மகத்தான காரியத்தைச் செய்ததின் மூலம் இந்திய உபகண்டத்திலே, தென் பிராந்தியத்திலும் குறிப்பாக சென்னை மாநிலத்தில், இந்தியின் ஆதிக்கம் ஒழிந்தது; இந்தியைக் கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்ற நிலை மாறியது!

தமிழகத்தோடு ஒன்றியிருந்த காரணத்தால், ஆந்திரத்திலும், கட்டாயமாக இந்தியைப் புகுத்த முடியவில்லை; திருச்சியில் ஏற்பட்ட இந்தி எதிர்ப்பு, விஜயவாடாவிலே கூட, இந்தியை, கட்டாயமாக்க முடியாதவாறு செய்துவிட்டது! திருப்பதியானாலும் சரி, விசாகையானாலும் சரி, தமிழன் தொடுத்த போரின் எதிரொலி, சென்றவிடமெல்லாம், சென்னை மாநிலத்தில் கேட்டது!

இன்றோ, நிலைமை வேறு; ஆந்திரம், தனியான மாநிலமாக நிற்கிறது! அதோடு, ஜனநாயக வரலாற்றிலேயே இல்லாத முறையில் மகா விசித்திரமானவர்கள் கூடிய அரசாங்கத்தால் ஆளப்படுகிறது!

ஆகவேதான், அவ்வளவு அரும்பாடுபட்டுத் துரத்திய இந்தியை, மெதுவாக, மறுபடியும் இப்பக்கம் கொண்டு வந்து திணிக்கின்றனர்!

நேற்று முன்தினம் வெளியான ஆந்திர சர்க்கார் அறிக்கைப்படி, எஸ். எஸ். எல். சி. பரீக்ஷை எழுதும் மாணவர்கள், இனி, இந்தியிலும் மார்க்குகள் பெறவேண்டுமாம்! இது போதாதென்று, ஆந்திர கல்வி இலாகா டைரக்டர், இந்தியை கட்டாயப் பாடமாக்கவும், முதல் மொழியாக்கவுமான திட்டமொன்றை சர்க்காருக்கு சமர்ப்பித்திருக்கிறாராம்! இந்தத் திட்டத்தை ஆதரித்து, சிபாரிசு செய்திருக்கிறதாம், ஆந்திர கல்விக் கூடம்! சர்க்கார், இந்தக் கட்டாய இந்தியை அமுலாக்கும் அறிக்கையும் இன்னும் சின்னாட்களில் வருமாம்!

கொள்கையைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு, மாநில அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் ஆந்திர மந்திரி சபை, இந்திக்கு ஆதிக்கம் தேடித்தர இசைந்துவிட்டது!

ஒன்றுபட்டிருந்த சென்னை மாநிலத்தில், பெரும் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல், முடிசூடா மன்னரே, 'கட்டாய இந்தி, தவறு!' என்று கூறுமளவு, நிலைமை வளர்ந்தது; ஆனால், இன்று, மெதுவாக ஆந்திர மாநிலத்தில் வந்து இடம் பிடிக்கிறது இந்தி!

அரசியல் அமைப்பிலே இன்னும் 10 ஆண்டுகளில் இந்தியைத் தேசிய மொழியாக்கிவிட வேண்டுமென்று கூறியிருப்பதால், அதை நிறைவேற்று முகத்தான் டெல்லியிலிருக்கும் கல்வி இலாகா ஒரு அறிக்கை அனுப்பி இருக்கிறதாம்; அந்த அறிக்கையின்படிதான், இந்த உத்திரவை, ஆந்திர சர்க்கார் வெளியிட்டிருக்கிறதாகத் தெரிய வருகிறது.

தாய் மொழிக்குப் பங்கம் விளைவிக்கும் இப்படிப்பட்ட ஒரு கல்வி சீர்திருத்தத்தை, ஆந்திரர்கள், எப்போது, எப்படி, எதிர்க்கப் போகிறார்கள் என்பது பொறுத்திருந்து பார்க்கவேண்டிய விஷயம்; ஆனால், நாம் கவனப்படுத்த எண்ணுவதெல்லாம், ஆந்திர சர்க்கார் வழியில் சென்னை சர்க்காரும் செல்ல முயற்சிக்கலாம், என்பதுதான்!

இந்தி ஆதிபத்தியம், கொஞ்சம் கொஞ்சமாக சர்க்கார அலுவலகங்களில் நுழைந்திருக்கிறது என்பதும், இந்த நேரத்தில் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டிய விஷயம்!

பத்து ஆண்டுகள் உழைத்த பின்கூட, இந்தி தேர்வில் வெற்றி பெறவில்லை என்ற காரணத்திற்காக, வேலையை விட்டு நீக்கப்படும் அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே செல்கிறது.

இந்த பிரச்னையைப் பற்றி தி. மு. கழகம் சிந்தித்துக் கொண்டுதானிருக்கிறது; ஆவன செய்யும்.

ஆனால், ஆந்திர சர்க்காரின் வழியைப் பின்பற்றி, டெல்லிக்குக் குனிந்து கொடுத்து, மறுபடியும் கட்டாய இந்தி வருமானால்......தமிழர் தயங்கார், பரணி பாடி, போர்க்களம் நுழைய!

திராவிடரின் கடைசி இரத்தம் மண்ணோடு கலக்கும் வரை, எப்பக்கம் இந்தி வந்திடினும், எதிர்த்திடுவர்!

தாய்மொழியின் ஆதிக்கம் அழிந்து, அன்னிய மொழி அரியாசனம் ஏறும் ஆதிக்கக் களியாட்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டான், தமிழன்!

அந்தந்த நேரத்திலே, அவனுக்கிருக்கும் நல்லெண்ணத்திலே, அளிக்கும் வரவேற்புகளில் மயங்கி, கட்டாய இந்தியை புகுத்திவிட்டோம் என்று நேரு பண்டிதரிடம் கூறி, 'சபாஷ்' பட்டம் அடைய நினைத்து, சென்னை மாநில ஆளவந்தார்கள் காரிய மாற்றுவார்களானால், தீயில் குதித்தவனின் கதிதான் அவர்களுக்கு ஏற்படும்!

இந்த உண்மையைத் தேசியத் தோழர்கள் நன்கு உணர வேண்டும்!

# புது அத்தியாயம்!

செப்டம்பர் 15:

இந்தத் திங்கள் பதினைந்தாம் நாளன்று கம்யூனிஸ்டு சீனாவின் சரித்திரத்தில் புதியதோர் அத்தியாயம் ஆரம்பமாகிறது!

சீன மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் காங்கிரஸ், அன்று ஆரம்பமாகிறது

சீனாவில், கம்யூனிஸ்டுகளின் வெற்றிக்குப் பின்னர் முதல் தடவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் சபை கூடுகிறது.

60 கோடி மக்களைக் கொண்ட சீனா, இதுபோன்று பல இன மக்களைக் கொண்ட ஒரே நாடாக, ஒரே ஆட்சியின்கீழ் அமைவது இதுவே முதல் தடவையாகும்.

இக்கூட்டத்தில் திபேத்தின் மத, அரசியல் தலைவர்களான தலாய் லாமாவும், பஞ்சன் லாமாவும் கலந்துகொண்டு, திபேத்தின் பிரதிநிதிகளாக இருப்பார்கள்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சீனாவின் எதிர்காலத்தை அமைக்கும் அதிகாரங்களை உடைய மக்கள் சபை, தேர்தலில், நிலப் பிரபுக்களும், 'புரட்சி எதிர்ப்பாளர்'களும் கலந்துகொள்ள அனுமதிக்கவில்லை.

கம்யூனிஸ்டுகளின் தேர்தல் முறையை, சீனாவில், அப்படியே பின்பற்றியிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

## பிரதிநிதிகள்

கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்திற்கும், அதிகார கட்டுப்பாட்டிற்கும் இடையே உள்ள மக்கள், நமது நாட்டிலுள்ள கிராமப் பஞ்சாயத்துக்கள் போன்ற அமைப்பிற்குக் கைகளைத் தூக்குவதன் மூலம், சீனாவில் 56,69,144 பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துள்ளனர்; இவர்களுக்கு, 'பிரைமரி காங்கிரசார்' (ஹிசியாங்) என்று பெயர்.

இவர்கள் மாகாண வாரியாகவும், பிரதேச வாரியாகவும் இணைக்கப்பட்டு, அந்த இணைப்புக் சமூகங்கள், பின்னர், 'நேஷனல் பீப்பிள்ஸ் காங்கிரஸ்' என்னும், சீனாவின் பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர்.

இத்தேர்தலில், இரகசிய முறை இருக்கிறது என்றாலும், கம்யூனிச சர்க்காரின் நடைமுறைகளினால், சீனப் பாராளுமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தல்களில் போட்டியின்றி அனைவரையும் ஏகமனதாகவே தேர்ந்தெடுத்தார்கள் என்று தெரிகிறது.

ஆகவே, ஆரம்பக் குழுவான 'ஹிசியாங்' என்னும் பிரைமரி காங்கிரசார் தேர்தலில் மட்டுமே நேரடியாக மக்கள் வாக்களித்தார்கள் என்பதும், பின்னர் நடைபெற்ற உயர்தரப் பாராளுமன்ற அமைப்புகளுக்கான தேர்தல்கள் அனைத்திலும் மக்கள் நேரடியாகக் கலந்து கொள்ளவில்லை என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

சீனப் பாராளுமன்றத்தில் ஒரே சபைதான் இருக்கும்; இந்தியாவில் இருப்பதைப் போன்று இரண்டு சபைகள் கிடையாது. சீன மக்கள் காங்கிரசில், 15,000 உறுப்பினர்கள் இருப்பார்கள் என்று நம்பப்படுகிறது. இவர்கள்தான் கம்யூனிஸ்டு சீனாவின் விதியை நிர்ணயிக்கும் அதிகாரம் உடையவர்கள்.

## மத்திய ஆட்சி

ஐக்கியமாக இணைக்கப்பட்ட பல இனங்களைக் கொண்ட சீனாவில், மத்திய சர்க்காரிடம் ஏராளமான அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன.

அண்மையில், சீனாவில் வெளியான உத்திரவொன்றின் மூலம், பிரதேசவாரி நிர்வாக அமைப்புகள் கலைக்கப்பட்டுவிட்டன. முனிசிபல், பஞ்சாயத்து போன்ற ஸ்தாபன மன்றங்களும், நேரடியாக மத்திய சர்க்காரின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட வேண்டியவை!

## தலைவர்

சீனாவின் மக்கள் காங்கிரசானது, நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுகிறது; இந்த மக்கள் சபை நாட்டின் தலைவரைத் தேர்ந்தெடுக்கும்; இந்தத் தலைவர், சீனாவின் பிரதம மந்திரியையும், மத்திய மந்திரி சபையின் அமைச்சர்களையும் நியமிக்கவும், பதவியிலிருந்து நீக்கவும் உரிமை பெற்றிருக்கிறார். இவரது முடிவுகளுக்கு மக்கள் காங்கிரசின் ஒப்புதல் தேவைப்படுகிறது என்றாலும், நடைமுறையில், சீன சர்க்காரின் தலைவர் ஒரு சர்வாதிகாரிக்குள்ள அதிகாரங்களைக் கொண்டவராக உள்ளார்.

இவர், தனது அதிகாரங்களை, இப்போது கூடப்போகும் மக்கள் சபை நிறைவேற்ற இருக்கும் சீன அரசியல் சட்டத்திலிருந்து மட்டும் பெறுவதில்லை; சீனாவின் கம்யூனிஸ்டுகளின் உயர்தர அமைப்பான பி. பி. சி. சி. என்னும் மக்கள் அரசியல் ஆலோசனை சபையிடமிருந்தும் சீனக் குடியரசின் தலைவர் தனது அதிகாரங்களைப் பெறுவார்; அதன் முடிவிற்குக் கட்டுப்படுவார்!

பி. பி. சி. சி. என்று அழைக்கப்படும் கம்யூனிஸ்டு கட்சியின் உயர்தரக் குழு, சீனாவில், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் அமுல் செய்யப்படும் வரையில், சீனாவின் ஆட்சியை நடத்த கம்யூனிஸ்டுகள் அமைத்த ஒரு தற்காலிகக் குழு!

சீனாவின் புதிய அரசியல் சட்டம் அமுலுக்கு வந்த பின்னர் இந்தக் குழுவிற்குத் தனியான உத்தியோகப் பொறுப்பு ஏதும் இருக்காது; ஆனால், இக்குழு புதிய அரசியல் சட்டம் அமுலுக்கு வந்த பின்னர், கலைக்கப்படாமல், தொடர்ந்து பணியாற்றும் என்று தெரிகிறது

இக்குழு, அரசியல் அமைப்பிற்கு அப்பால் உயரியதாக விளங்கும் அமைப்பாகும். ஆனால், கம்யூனிஸ்டுகளின் ஆட்சியை நீடிக்கவும், சீன நாட்டு சர்க்காரின் கொள்கைகளை நியமிக்கவும் இக்குழு பயன்படும். இக்குழுவின் உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டு சீனக் குடியரசுத் தலைவர் நடந்து கொள்வாராம்!

இக்குழு, 1949-ல் எல்லாக் கட்சியினரின் கூட்டுச் சேர்க்கையால் அமைக்கப்பட்டது. புரட்சியை ஆதரித்த அனைவரும் இதில் சேர்க்கப்பட்டார்கள். சீனக் குடியரசு என கம்யூனிஸ்டுகளால் பிரகடனம் செய்யப்பட்ட பின்னர், ஆட்சிப் பொறுப்பை இக்குழுவினரே நடத்துகின்றனர்.

இப்போது, இக்குழு, கம்யூனிஸ்டு கட்சியின் தலைமையில், நாட்டை நல்ல பாதை நோக்கி அழைத்துச் செல்ல, அரசியல் அமைப்புக்கு உட்படாமல் இயங்கி நீடித்து செயலாற்றுமென்று கூறப்படுகிறது. இக்குழுவில், சீன மக்கள் படையின் பிரதிநிதிகளும் இருக்கிறார்கள்.

—சிவம்.

# கழகச் செய்திகள்

## ஆமதாபாத் - பாப்பு நகர் தி. மு. கழகக் கிளை

21—8—54 மாலை ஆமதாபாத் பாப்பு நகர் (இரக்கியால் பகுதி) தி. மு. கழகம் புனரமைப்புக் கூட்டம் புதுவை - வைத்திய நாதன் இல்லத்தில் நடைபெற்றது. தோழர் சு. புரட்சிமாறன் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார்; தோழர் கணபதி தலைமை ஏற்றார்; தோழர்கள் குமார், ச. சண்முகநாதன், பாபு, இரா. நடராசன், இரா. வைத்திலிங்கம், ஆர். டி. சலம் ஆகியவர்கள் "கழகத் தோழர்கள் கடமை" என்பது பற்றி சொற்பொழிவாற்றினர். புதுவை வைத்தியநாதன் "உணர்வும் ஒழுக்கமும்" என்பது பற்றிப் பேசிய பின், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—ச. சண்முகநாதன் - செயலாளர்; இரா. குமார் - துணைச் செயலாளர்; கணபதி - பொருள் காப்பாளர்; சு. புரட்சிமாறன் - விளம்பர உறுப்பினர்; செயற் குழு உறுப்பினர்கள்: இலக்குமணன், காளை, மூர்த்தி, பொ. வைத்தியநாதன், க. சதாசிவம், சடகோபன், வெ. க. சுப்பிரமணியன், மா. மண்ணு; நகரக் குழு உறுப்பினர்கள்: ச. சண்முகநாதன், இரா. குமார், இலக்குமணன், புதுவை வைத்தியநாதன்.

## மேச்சேரியில் தி. மு. க. பொதுக்கூட்டம்

27—8—54ல், பத்திரகாளியம்மன் கோவில் முன் திடலில், தோழர் மு. ப. சிவம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், க. கு. சின்னுசாமி, அ. பாலு ஆகியோர் "சமுதாயமும் அரசியலும்" என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

## குராவப்புலத்தில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

29—8—54ல் இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் ஓர் பொதுக் கூட்டம் தோழர் பி. எஸ். நடேசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் என்.எஸ். இளங்கோ, ஜி. கிருஷ்ணன், எஸ். வைத்திநாதன் ஆகியோர் பேசினர்.

தோழர் என். எஸ். இளங்கோ பேசுகையில், திரு—கொச்சி தமிழ்ப் பகுதிகளை தமிழகத்துடன் சேர்க்க வேண்டுமென்றும், அடக்குமுறைகளை அள்ளி வீசும் பட்டம் தாணுவின் போக்கைக் கண்டித்தும், அதேபோல் பிரெஞ்சிந்தியத் திட்டங்களான காரை - புதுவையை விட்டுப் பிரெஞ்சுக்காரர்கள் வெளியேற வேண்டுமென்றும் கோரியதுடன், இலங்கையிலிருந்து திரும்பும் தமிழர்களின் துயர் நீக்க காமராசர் என்ன திட்டம் வைத்திருக்கிறார் என்றும் கேட்டார். மத்திய சர்க்காரின் மாற்றாந்தாய்ப் போக்கைக் குறிப்பிடுகையில், வடநாட்டு அணைகளுக்குப் பணத்தை வாரி வழங்கும் மத்திய சர்க்கார் தமிழ்நாட்டு அணைகளுக்கு தக்க பாதுகாப்பு செய்யாததேன்? வடநாட்டு அணைகளுக்கு பல கோடி வழங்கும் சர்க்கார் தென்னாட்டு அணைகளுக்கு சில கோடி வழங்குவதேன்? இந்தப் பேதம் நீங்க 'திராவிட நாடு திராவிடருக்கே' என்பது ஒன்றுதான் தக்க மருந்து என்றும் கூறினார்.

கூட்ட முடிவில், பலத்த எதிர்ப்புகளுக்கிடையே மதிவுத் திருமணம் செய்து கொண்ட ராசரெத்தினம் — அஞ்சம்மாள் இருவருக்கும் மலர் மாலைகள் அணிவித்து பாராட்டுதல் தெரிவிக்கப்பட்டது.

## கடையநல்லூர் தி. மு. க.

27—8—54 இரவு 8 மணி அளவில் செயற்குழுக் கூட்டம் தோழர் சி. நடராசன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர் எம். எ. சுப்பையாவை கழக உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குவதென்றும், திரு—கொச்சி அப்பாக்கிப் பிரயோகத்தில் உயிர் நீத்த தோழர்கட்கு அனுதாபம் தெரிவித்தும், ஏற்கனவே கொடுத்திருக்கும் தீர்மானப்படி வரி கொடுக்க இயலாதவர்களின் வீட்டு வரியை ரத்து செய்யும்படி மீண்டும் நகரசபையை வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சென்னை-மயிலை தி.மு.க.

சமீபத்தில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், திரு-கொச்சி தமிழ் நாடு கிளர்ச்சியிலும், பிரெஞ்சிந்திய விடுதலைப் போராட்டத்திலும் கலந்து கொண்ட வீரர்களுக்குப் பாராட்டையும், உயிர் நீத்த தோழர்களின் குடும்பங்களுக்கு அனுதாபமும் தெரிவித்துக் கொள்ளப்பட்டதுடன், தோழர் கு. வடமலை அவர்களை செயற்குழு உறுப்பினர் பதவியிலிருந்து விலக்கியும் முடிவு செய்யப்பட்டது.

## குன்றை தி. மு. கழகம்

30—8—54ல் நடைபெற்ற கழக நிர்வாகக் குழுக் கூட்டத்தில், சென்ற பொதுக்கூட்டத்தின் வரவு-செலவு கணக்கு பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், பொருளாளராக தோழர் ம. பி. மாணிக்கம் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## ஆமதாபாத் — நரோடா தி. மு. கழகம்

1—9—54ல், தோழர் இரா. புஷ்பா தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, நகரக் குழு உறுப்பினர்களாகத் தோழர்கள் கே. சிதம்பரம், மு. பெரியசாமி, கா. முனிசாமி, அ கந்தசாமி, இரா. நடராசன் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கழக இல்லப் பொறுப்பாளராக தோழர் வி. ஏ. முகம் தேர்ந்தெடுக்கப்பட்டார். தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## வாளவாடி தி. மு. கழகம்

28—8—54-ல், கழகத்தின் இரண்டாம் ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. அன்று மாலை தோழர் கண்ணன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பல இடங்களில் கொடியேற்றி வைத்து, தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி சொற்பொழிவாற்றினார்; மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது.

## சென்னிமலை தி. மு. க.

29—8—54 இரவு 9 மணிக்கு கழக அலுவலகத்தில் செயலாளர் தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றபோது, தோழர் ஏ. கொளந்தசாமி விலகுதலை அங்கீகரித்தும், கோவை மாவட்ட நாட்டாண்மைக் கழகத் தேர்தலில் இத்தொகுதியில் போட்டியிடும் சுயேச்சை அபேட்சகர் தோழர் கே. சி. சுப்பையாவை ஆதரிப்பதென்றும் ஜூலை 29-ம் நாள் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கிணங்க, இவ்வூர் பஞ்சாயத்து போர்டு இலவச வாசகசாலையில் இரவுப் பத்திரிகையை இதுவரை தருவிக்காததை மீண்டும் போர்டு நிர்வாகிக்குத் தெரியப்படுத்தி பத்திரிகை தருவிக்குமாறு கேட்டுக் கொள்வது எனவும் முடிவு செய்யப்பட்டது.

## தொட்டம்பாளையம் தி. மு. கழகம்

முதல் ஆண்டு விழா பொதுக் கூட்டம்

22—8—54 மாலை 5 மணியளவில், கழகக் கொடிகளுடன் தோழர் குப்புசாமி தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது; தோழர் ஆர். எஸ். மணி கொடியேற்றி வைத்தார்; மாலை 6-30 மணிக்கு கோபி ஜி. என். ராஜு தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது; தலைவர், சமுதாயம் சீர்குலைந்த நிலை, கழகக் கொள்கை ஆகியவை பற்றி சொற்பொழிவாற்றினார். தோழர் என். அப்பாவு, கழகப் போராட்டங்கள், இலங்கை வாழ் தமிழர்களின் அவலம் ஆகியவைபற்றி விளக்கினார்; தோழர் பி. ஏ. சாமிநாதன் பேசிய பின், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: ஆர். சுந்தரம்; துணைச்செயலாளர்: ஆர் எஸ். மணி; பொருளாளர்: கே. வெங்கிட்டராமன்; மாவட்டப் பிரதிநிதி: ஏ. எஸ். இராசு; விளம்பர உறுப்பினர்: பி. எஸ். பன்னீர்செல்வம்; செயற்குழு உறுப்பினர்கள்: டி. எஸ். ஆர் வளர்மதி, ஏ. குப்புசாமி, பொன்னுசாமி, வி. என். கிரி, பி. எஸ். மோகநாதன், ஓ. எஸ். விட்டமணி ஆர். எஸ். அர்த்தநாரிசாமி, டி. வி. ரங்கசாமி, வி. ரங்கசாமி, வி. ஆர். பாரி, சி. கே. ரங்கசாமி, பு. க. கிருஷ்ணன்.

## ஆமதாபாத் — ஜமால்பூர் தி. மு. கழகம்

22—8—54 மாலை 5-30 மணிக்கு, தோழர் கா. தேவராசனார் தலைமையில் உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் க. பெருமாள், ஆர். டி. சலம், இரா. வைத்திலிங்கம், இரா. நடராசன் கழக வளர்ச்சி பற்றி பேசிய பின், கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:- செயலாளர்: பொ. இரத்தினவேலன்; துணைச் செயலாளர்: ப. பாண்டியன்; பொருளாளர்: கெ. நம்பி; பொதுக்குழுப் பிரதிநிதிகள்: ப. ஆதிமூலம், கா. தேவராசனார், இரா. வைத்திலிங்கம், சி. சண்முகம், ஆர். டி. சலம், க. பெருமாள்; செயற்குழு உறுப்பினர்கள்: இரா. அப்பாராவ், டி. பி. பாலகிருஷ்ணன், பி. தில்லை கோவிந்தன், எம் இராமலிங்கம், ஆர். டி. சலம், சி. சண்முகம், ஆர். கண்ணன்.

* * *

29—8—54 காலை 9-30 மணியளவில் கழக இல்லத்தில் புதிய செயற்குழு கூட்டம் தோழர் ஆர். டி. சலம் தலைமையில் நடைபெற்றபோது, பழைய கணக்குகள் பரிசிலனை செய்து ஒப்புக் கொள்ளப்பட்டதுடன், சில முடிவுகளும் செய்யப்பட்டன.

## கல்லக்குடி தி. மு. கழகம்

29—8—54ல் நடைபெற்ற முதலாவது ஆண்டு விழா பொதுக்கூட்டத்தில் 'டால்மியாபுரம்' பெயர் மாற்றப் போராட்டத்தில் உயிர்நீத்த உத்தமர்களுக்கு வீரவணக்கம் தெரிவித்துக் கொண்டும், கல்லக்குடியில் பொதுக் கூட்டங்கள் நடத்த மைதானமும், அங்கு சிறந்த முறையில் ஒரு மேடையும் அமைக்க பஞ்சாயத்தைக் கழகத்தைக் கேட்டுக்கொண்டும், கல்லக்குடி, ஆத்துக்குடி வழக்குகளை உடனடியாக வாபஸ் வாங்க வேண்டுமெனக் கோரியும், கல்லக்குடி அறப்போராட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட தி. மு. க. தோழர்களின் பேரில் 'ரவுடி லிஸ்ட்' திறந்து வைத்திருப்பதை உடனடியாக வாபஸ் பெற வேண்டுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## தொளாரில் தி. மு. கழக ஆண்டுவிழா பொதுக் கூட்டம்

28—8—54ல், இவ்வூர் தி. மு. கழக முதலாவது ஆண்டுவிழா பொதுக் கூட்டம் வ. உ. சி. திடலில் நடைபெற்றது. தோழர் ஆ. தங்கமணி தலைமையில் வ. உ. சி. திடலிலிருந்து ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

கூட்டத்திற்கு தோழர் வே. கோவிந்தசாமி தலைமை தாங்கினார். தோழர் தி. கொ. சிங்காரம் கழகக் கொடியை ஏற்றி வைத்து கொடியின் இலட்சியம் பற்றி பேசினார். பின்னர் தோழர்கள் சி. முனுசாமி, பொன்னம்பலம், தொ. பிச்சமுத்து, கே. ஜி. சாமிநாதன் ஆகியோர் பேசினர். பின்னர், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தொளாரிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்றத்திற்குக் கொண்டுவர இவ்வூர் தி. மு. கழகம் முழுப் பங்கேற்க வேண்டுமென்றும், திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியத்தை வற்புறுத்தியும், திராவிட நாட்டிற்கு வடநாட்டுத் தொடர்பு அவசியமில்லை என்பது பற்றியும் விரிவுரையாற்றினார்.

## குருக்கத்தியில் தி. மு. க. அமைப்பு

29-8-54ல், நாகை தாலுக்கா, குருக்கத்தியில் தோழர் கே. எஸ். வி நாதன் சுருட்டு கிடங்கில், தோழர் கே. எஸ். வி நாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், குருக்கத்தி தி. மு. க. கிளை அமைக்கப்பட்டு, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—கே. சந்தானம் செயலாளர்; கோ. சிங்காரம் துணைச் செயலாளர்; தி. செங்கையன் பொருள்காப்பாளர்; கே. எஸ். வி. நாதன் மாவட்டப் பிரதிநிதி; செயற்குழு உறுப்பினர்கள்: சு. முனியப்பன், கு. பொன்னையா, க. முத்தையன், க. செல்லப்பா, சா. பஞ்சநாதன், சு. வடிவேலு, சி. சொக்கலிங்கம், ப. பெருமாள், ச. அப்துல் காதர்.

## குள்ளக்காபாளையம் தி. மு. கழகம்

29—8—54 இரவு தோழர் கு. க. நாகு தலைமையில் நடைபெற்ற செயற்குழுக்கூட்டத்தில், குள்ளக்காபாளையத்தில் ஒரு ஆரம்பப்பள்ளி ஏற்படுத்துமாறு அரசியலாரை வற்புறுத்தியும், இவ்வூர் தாழ்த்தப்பட்ட மக்கள் குடிதண்ணீர் வசதிக்கும், போத்தனூர் தாழ்த்தப்பட்ட மக்கள் குடி தண்ணீர் வசதிக்கும் உடனடியாகக் கிணறுகள் வெட்டி உதவுமாறும், அரசியலாரைக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பம்பாய் தி. மு. கழகம்

26—8—54 மாலை 7 மணியளவில் தாராவி குடி அரசு நிலையத்தில், தோழர் மா. இரா. குறள் தாசன் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கடிதப் போக்குவரத்துகள் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. நீண்ட நேர விவாதத்திற்கிடையே சில முக்கிய முடிவுகள் செய்யப்பட்டது.

## அயோத்தியாபட்டணம் வட்ட கமிட்டி கூட்டம்

22—8—54ல் காரிப்பட்டி முசாபரி பங்களாவில் தோழர் இரா. மாணிக்கம் தலைமையில் வட்டக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றபோது, சேலம் வட்டாரத்திற்கு கழகப் பேச்சாளர்களை வரவழைப்பது பற்றியும், 'நம் நாடு' இதழின் வளர்ச்சிக்குப் பொருளுதவி செய்வது பற்றியும், வரப்போகும் ஜில்லா போர்டு தேர்தலில் சுயேச்சையாக நிற்கும் தோழர்களுக்கு எவ்வித ஆதரவு தருவது என்பது பற்றியும், ஆராய்ந்து முடிவுகள் செய்யப்பட்டன.

## எம். ஆர். இராதா 'இராமாயண' நாடகத் தடைக்குக் கண்டனம்!

2—9—54 இரவு 8-30 மணியளவில், வண்ணாரப்பேட்டை, மிண்ட் ரோடு, 14-ம் நெம்பர் கட்டிடத்தில் வட சென்னை மக்களின் சார்பில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது தோழர் எம். ஆர். ராதா அவர்களின் 'இராமாயண' நாடகத்தை, அரசாங்கம் தடை செய்து பிரஜா உரிமைக்குப் பங்கமேற்படுத்தியிருப்பதுடன், 200 நாடகத் தோழர்களுக்குத் தொழில் பாதகமேற்பட்டு, பல ஆயிரம் ரூபாய்கள் நஷ்டமாகியிருப்பதாகவும் தெரிவதால், இதற்கு முதலமைச்சர் தக்க பரிகாரம் தேட வேண்டுமென்றும், அதற்கான நடவடிக்கை எடுக்க ஆவன செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல்

18—6—54ல் நடைபெற்ற கடையநல்லூர் பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலில் 1498 ஓட்டுகள் அதிகமாகப் பெற்று வெற்றி பெற்ற எஸ். கே. முகம்மது யூசுப் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என, அவருடன் போட்டியிட்டு தோற்ற ரா. ராமசாமி (நாயக்கர்) தென்காசி முன்சீப் கோர்ட்டில் தாக்கல் செய்திருந்த ஆட்சேபனை மனுவை, விசாரணை செய்த தேர்தல் கமிஷனர், 31—8—54ல், தேர்தல் செல்லத்தக்கதுதான் என்று கூறி, ஆட்சேபனை மனுவை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தார்.

## பெயர் சூட்டல்

திருவெண்ணெய்நல்லூர் தி. மு. க. சார்பில் 28-8-54-ல் தேதி நடந்த பொதுக் கூட்டத்தின்போது, தோழர் குமாரசாமி அவர்களின் மகளுக்கு "மல்லிகா" என்று பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களால் பெயர் சூட்டப்பட்டதன் நினைவாக, 'நம் நாடு' இதழ் நிதி வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிப்பு அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடைய—வெளியீட்டாளர்.

## சூரப்பள்ளி தி. மு. கழகம்

30—8—54 இரவு 7 மணிக்கு நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் தோழர் மு. சி. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. மேட்டூர் க. கு. சின்னுசாமி கழகக் கொள்கைகள் பற்றி விரிவுரையாற்றினார். பின்னர், நிர்வாகக் குழு உறுப்பினர் நாகராசனை பதவியிலிருந்து விலக்கி, தோழர் செ. சீனிவாசனை நிர்வாகக் குழு உறுப்பினராகவும், தோழர் அ. வெங்கடசாமியை பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், கழக ஆண்டு விழாவை செப்டம்பர் மாத இறுதிக்குள் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டதுடன், கழக வரவு - செலவு சரி பார்க்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது.

## பாலக்காடு நகர தி. மு. க.

22—8—54 பகல் 3 மணிக்கு கழகக் கட்டிடத்தில் உறுப்பினர்கள் கூட்டமும், நிர்வாகிகள் தேர்தலும் நடைபெற்றது. தோழர் எஸ். வி. மாரிமுத்து தலைமை வகித்தார். தோழர்கள் சி. சங்கரன் செயலாளராகவும், எஸ். ஏ. சுப்பையா துணைச் செயலாளராகவும், எஸ். வி. மஜீத் பொருளாளராகவும், மாவட்ட உறுப்பினராகவும், விளம்பர உறுப்பினர்களாக ஏ. கே. விந்தன், கே. அச்சுதனும், செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள் வி. ஏ. காதர்ஷா, பி. பாலன், பி. மஜீத், எம். ஏ. வாசு, ஷாகுல் அமீது, சுலைமான், எம். மாணிக்கம், பி. மாரியப்பன், சி. மருதாசலம், எஸ். சந்திரன் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## என். வி. நடராசன் சுற்றுப்பயணம்

★

செப். 10: திமிரி (வ. ஆ.)
„ 11: திருமணி (வ. ஆ.)
„ 12: காலை—செஞ்சி
மாலை—இலாசன்பேட்டை
„ 16: மாமண்டூர் (அறந்தாங்கி)
„ 17: நல்லமங்கலம்
„ 18, 19: நெல்லை மாவட்டம்
„ 20: மேட்டூர் அணை
„ 21: வீரசோழபுரம்
„ 25: உத்திரமேரூர்
„ 26: குடியேற்றம்

## தோழர் ஜெகன் விடுதலை?

### திருமதி ஜெகன் கைது!

ஜார்ஜ்டவுன், செப். 6—
பிரிட்டிஷ் கயானாவின் முன்னாள் பிரதமரும் இப்போது ஆறுமாத சிறைத் தண்டனை அனுபவித்துக் கொண்டிருப்பவருமான டாக்டர் ஜெகன், சனிக்கிழமையன்று விடுதலை செய்யப்படுவார் என்று தெரிகிறது.

ஜார்ஜ்டவுன் போலீசார் மக்கள் முன்னேற்றக் கழகத்தின் செயலாளர் திருமதி ஜெகனை மாஜிஸ்திரேட் உத்தரவின்படி 55 பவுன் அபராதம் கட்ட மறுத்ததாகக் கைது செய்திருக்கின்றனர்.

## ராஜீய உறவுகளை முறித்துக்கொள்ள வேண்டுமாம்!

### ஐசனோவருக்கு செனட்டர் நோலண்ட் தந்தி

பசதீனா (கலிபோர்னியா), செப். 5—
"அமெரிக்க விமானத்தை, சுட்டு வீழ்த்தியதை ஒட்டி, ரஷ்யாவுடன் கொண்டுள்ள ராஜீய உறவுகளை அமெரிக்கா முறித்துக்கொள்ள வேண்டும்,"

என்று, செனட்டர் நோலண்ட், ஜனாதிபதி ஐசனோவருக்குத் தந்தி மூலம் தெரிவித்திருக்கிறாராம். "ரஷ்ய மக்களை ஆளுகிறவர்களுக்கு, நமது வெளிநாட்டிலாக்காவிலிருந்து அனுப்பப்படுகிற ஆட்சேபணைக் குறிப்பு, விஷயத்தை உணர்த்த வல்லமையற்றதாக இருக்கிறது; எனவே, ரஷ்யாவின் தூதுவர்களாய் அமெரிக்காவிலிருக்கும் அவர்களை உடனே திரும்ப அனுப்பி விடுக; நமது விமானத்தைச் சுட்டு வீழ்த்தியது, ரஷ்யாவின், அக்கிரமத்தையும், ஆக்கிரமிப்பு மனப்பான்மையையும் எடுத்துக் காட்டுகின்றன" என்றும், செனட்டர் நோலண்ட் குறிப்பிட்டிருப்பதாகத் தெரிகிறது.

## சவுந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பகத் துவக்க விழா கூட்டம்

சாத்தூர், செப். 4—
28—8—54 மாலை 4-30 மணியளவில், தி. மு கழகச் சார்பில், சண்முகநாதன் பலசரக்குக் கடையில், தோழர் எம். முத்தையா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில். கழக ஆதரவில் மேற்படி படிப்பகம் ஆரம்பிப்பதென முடிவு செய்யப்பட்டு, கீழ்காணும் தோர்ந்தெடுக்கப்பட்டனர்:—தலைவர்: சண்முகநாதன்; செயலாளர்: ஆர். பி. சன்யாட்சன்; பொருளாளர்: எம். முத்தையா; மற்றும் சில உறுப்பினர்கள் சேர்த்தெடுக்கப்பட்டனர்.

12—9—54 காலை 8 மணியளவில்; மதுரை வழக்கறிஞர் தோழர் என். கணேசன் படிப்பகத்தைத் திறந்து வைப்பார். அன்று இரவு தோழர் பி என். கிருஷ்ணன் குழுவினரால் "இரத்தக் கறை" நாடகம் தோழர் என். கணேசன் தலைமையில் நடைபெறும்.

## கழகக்கூட்டங்கள்

★

### கோடாலிகருப்பூர்

தி. மு. கழக திறப்புவிழா
10—9—54 மாலை 6 மணிக்கு
தலைவர்: அண்ணாசாமி
பேசுவோர்:
போ. தருமன்
ம. கோ. மணி
ந. இளங்கோ

★

### துவரங்குறிச்சி

முக்கூட்டு சாலை மைதானத்தில்
10—9—54 மாலை 4 மணிக்கு
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
என். எஸ். இளங்கோ
ந. தருமலிங்கம்
அரங்க. இராவணன்

★

### இலங்கை

தி. மு. க. கிராண்ட்பாஸ் கிளை ஆண்டு விழா
மத்திய அரசினர் பாடசாலை மண்டபம் (பஞ்சிகாவத்தை)
கந்தசாமி அரங்கில்
12—9—54 மாலை 3 மணிக்கு
தலைவர்:
கே. எஸ். எம். கலாநேசன்
பேசுபவர்:
இரா. அதி. மணி

## திருமணங்கள்

10—9—54 காலை 9 மணிக்கு அண்ணங்காரப்பேட்டை தி. மு. க. துணைச் செயலாளர் தோழர் ஏ. மாணிக்கம்—தோழியர் மணிமேகலை சீர்திருத்தத் திருமணம் தோழர் அண்ணாசாமி தலைமையில் நடைபெறும். தோழர்கள் போ. தருமன், ம. கோ. மணி, ந. இளங்கோ ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

9—9—54 காலை 8 மணிக்கு சென்னை 29-வது வட்ட தி. மு கழக முன்னாள் செயலாளர் தோழர் கங்காலன்—தோழியர் இருட்டினவேணி திருமணம் சென்னை, சிந்தாதிரிப்பேட்டை, 116, சின்னண்ணச் செட்டி தெருவில் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெறும்.

* * *

10—9—54 காலை 9½ மணிக்கு வாலாஜா தாலுக்கா அந்தந்திமிரிகளர், பிசகை நாயசாமி முதலியார் தெருவில் தோழர் ஏ. சீனிவாசன் — தோழியர் சரோஜா திருமணம் தோழர் என். வி. நடராசன் தலைமையில், தோழர் கண்ணதாசன் முன்னிலையில் நடைபெறும். இத்திருமணத்தின் நினைவாக 'நம நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்-நன்றி புடையது—பொறுப்பாளர்.

## தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை — திருத்தம்

நேற்றைய இதழில் வெளியான தூத்துக்குடி சதி வழக்கு விசாரணையில், சர்க்கார் தரப்பில் சாட்சியமளித்த வக்கீல் சேதுப்பக்கர், எதிர்தரப்பு வழக்கறிஞர்களால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டதின் தொடர்பு, ஆரம்பத்திலின்றி, 3-ம் பக்கம் 5-வது கலத்தில், இரண்டாவது வரியிலிருந்து ஆரம்பமாகி, 4-ம் பக்கம் முதல் கலத்தில் முடிவுறுகிறது; அதன் தொடர்ச்சி 3-ம் பக்கம் 3-ம் கலத்தின் முதலிலேயே ஆரம்பமாகிறது; அன்றியும், 3-ம் பக்கத்தில், 5-வது கலத்தின் முதல் வரிக்குப் பிறகு தொடர்பு விடுபட்டுப்போயுள்ளது; அவை 4-ம் பக்கம் முதல் கலத்தின் கீழ் தரப்பட்டுள்ளது. தோழர்கள் இம்மாற்றங்களைத் திருத்தி வாசித்துக்கொள்ளக் கோருகிறோம்.

# இந்து நாகரீகம் விளைவித்த இழிவு!

## படித்த வாலிபர்களை சமூக சேவைக்கு நியமிக்கலாம்

### தாழ்த்தப்பட்டோர் நிலை உயர அம்பேத்கார் கூறும் வழி

தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை பற்றி விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட தனி அதிகாரியின் 1953-ம் ஆண்டு அறிக்கை பற்றி இந்தியப் பாராளுமன்ற மேல்சபை விவாதித்தபோது, டாக்டர் அம்பேத்கார், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்து மதம் இழைத்த கொடுமைகளை எடுத்துக் காட்டி, காந்தியின் பெயரால் ஒரு நிதியை ஏற்படுத்தி தாழ்த்தப்பட்டோரின் நிலையை உயர்த்த வேண்டுமென்றும், இதற்கான நிதியை உப்பு வரியை விதிப்பதின் மூலம் திரட்டலாம் என்றும் குறிப்பிட்டார்.

"நாட்டிலே வதியும் கோடிக்கணக்கான மக்களை உயர்த்த வழி எதும் இந்திய சர்க்கார் செய்யவில்லை என்றால், இப்பிரச்சினை பற்றி உருவாகியுள்ள எரிமலை கக்கும் நெருப்பில், இந்திய சர்க்காரும், அதன் அரசியல் சட்டமும் அழிந்துபோகும்," என்று அவர் எச்சரித்தார்.

"ஆறாயிரம் ஆண்டுகளாக இந்து நாகரீகம் சாதித்தது என்ன? இத்தனை ஆண்டுக் காலமாக இந்து நாகரீகம், 5 கோடி தாழ்த்தப்பட்ட மக்களையும், இரண்டு கோடி மலை ஜாதியினரையும், 50,000 பரம்பரைக் குற்றவாளிகளையும் உற்பத்தி செய்திருக்கிறது. இப்படிக் கொடுமை புரிந்த நாகரீகத்தைப் பற்றி என்ன சொல்வது? அதன் அடிப்படையிலேயே தவறு இருக்கிறது என்பதைத் தவிர வேறு என்ன கூற முடியும்?" என்றார் அம்பேத்கார்.

90 நிமிட நேரம், டாக்டர் அம்பேத்கார், இப்பிரச்சினை பற்றிப் பேசியபோது எடுத்துக் காட்டியதாவது:—

"தாழ்ந்தப்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த நாட்டிலே உள்ள தரிசு நிலங்களைப் பிரித்து கொடுக்க வேண்டும்; இப்பிரச்சினையை நீங்கள் தீர்க்காவிடின், அதன் விளைவு மிகவும் மோசமானதாக இருக்கும். வெளியில், இப்பிரச்சினை, ஒரு பெருந் தீயாக உருவெடுத்து, கொழுந்துவிட்டு, புகைந்து கொண்டிருக்கிறது அது உங்களிடையே மிகவும் சுலபமாக நுழைந்துவிடும். தாழ்த்தப்பட்ட மக்கள் அப்பெருந் தீயை உங்களிடம் கொண்டுவர முன்வந்து விடுவார்கள். அந்த நிலை வருமானால் நீங்களும் உங்கள் அரசியல் சட்டமும் இருந்த இடம் தெரியாமல் போகும். அதன் பின்னர் எதுவும் மிச்சமாக இருக்காது. தரிசு நிலங்களைப் பகிர்ந்து கொடுக்க அரசியல் சட்டத்தைத் திருத்துங்கள்.

"காந்தியார், தாழ்த்தப்பட்டோரின் பிரச்சினைக்காக அரும்பாடு பட்டதாகச் சொல்கிறீர்கள்; அப்படியென்றால், அவருக்கு மரியாதை செய்யும் பொருட்டு, நீக்கப்பட்ட உப்புவரியை மீண்டும் விதியுங்கள்; காந்தியாரின் பெயரிலேயே நிதி ஒன்றை அமைத்து, தாழ்த்தப்பட்டோரின் உயர்வுக்கு ஆவன செய்யுங்கள்.

"தாழ்த்தப்பட்ட மக்களின் துயரம் சொன்னும் தரமன்று; அவர்கள் அனுபவிக்கும் வேதனைகள் பலவற்றை விசாரணைக் கமிஷன் குறிப்பிடவில்லை.

ராஜஸ்தானின் கொள்ளைக்காரர்கள் 30 தாழ்த்தப்பட்ட மக்களைச் சுட்டுக் கொன்றுவிட்டார்கள். தங்களைப் போன்ற சரிசமமாக தாழ்த்தப்பட்டோர் உரிமைகளை அனுபவிப்பதைக் கண்டு மனம் பொருமி, ஜாதி இந்துக்கள், ராஜஸ்தானில், கொள்ளைக் கூட்டமாக வேண்டுமென்றே மாறி, போலீசாரின் உதவியுடன், தாழ்த்தப்பட்ட மக்களைப் பயமுறுத்தி, அவர்களில் 30 பேரைச் சுட்டுக் கொன்றார்கள்; ஏன் இச்சம்பவம் இந்த அறிக்கையில் காணப்படவில்லை?

"சட்டத்தை மீறும் செயல்கள் ஏராளமாக நடைபெற்றிருக்கின்றன. மக்களின் மனமாற்றம் முதலில் தேவை. "குற்றம் புரிவோரைத் தண்டிப்பதால் என்ன பயன்? பின்னர் அவர்கள் சத்தியாக்கிரகம் செய்வார்கள். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தாழ்த்தப்பட்டோர் மீது நடத்தப்படும் சட்ட விரோத செயல்களை, தாழ்த்தப்பட்ட மக்கள் முன் வந்து சட்டத்தை மீறுவோர் மீது வழக்குத் தொடர இயலாத காரணத்தால், மீண்டும் நீடித்து நடைபெறும் நிலை ஏற்படும்."

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளிக்கப்படும் வெளிநாட்டு உபகாரச் சம்பளங்கள் பற்றி, டாக்டர் அம்பேத்கார் கூறியதாவது:-

"கல்வியில் தாழ்த்தப்பட்ட மக்களிடையே முன்னேற்றம் ஏற்பட்டது ஓரளவு உண்மைதான்; ஆனால், 1940-ல், வெளிநாடுகளுக்கு தாழ்த்தப்பட்ட இன மாணவர்களை கல்விக்காக அனுப்புவதென்று ஏற்பாடாயிற்று; ஆனால், சுதந்திரம் வந்த பிறகு, இராஜகோபாலாச்சாரியார் கல்வி அமைச்சரானார்; அவர் மிகவும் மத நம்பிக்கை உடையவர்; அவர், இப்பிரச்சினையை அதே நோக்குடன் கவனித்தார். அதன் பயன், தாழ்த்தப்பட்ட இன மாணவர்களில் ஒருவரேனும், வெளி நாடுகளுக்குக் கல்வி பயில அனுப்பப்படவில்லை; இது எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது; ஆனால், இது மிகவும் ஆபத்தான போக்கு!"

"நாட்டிலே ஆளும் வகுப்பு—ஆளப்படும் வகுப்பு என்ற இந்த பிளவு இனி நீடிக்க முடியாது கல்வி வசதிகளும், நிர்வாகப் பதவிகளும் ஆளும் வகுப்பிற்கே போய்ச் சேருவதை இனியும் அனுமதிக்க முடியாது. சர்க்காரில் உள்ள காரியதரிசிகளைப் பாருங்கள்: ஒவ்வொரு சர்க்கார் காரியதரிசியின் மகனும், மகளும், ஆக்ஸ்போர்டிலோ, அல்லது கேம்பிரிட்ஜிலோ காணப்படுகிறார்கள். இந்த அநீதி பல நூற்றாண்டுகளாக நடைபெறுகிறது. இது சகிக்க முடியாத இழிநிலையாகும்.

"எங்களை, ஒரு குறிப்பிட்ட வகுப்பார் ஆளுவதை அனுமதிக்க முடியாது. எல்லோருக்கும் கல்வி வசதி அளிக்க சர்க்கார் முயற்சிக்க வேண்டும். எக்காலத்திலும் நாங்கள் அடிமை இனமாகவே இருக்கப் போகிறோம் என்பது நடவாத காரியம்"

நாட்டிலே காணப்படும் பல அலுவலகங்களில், சர்க்கார் பதவிகளில், தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை என்பதையும், ஆண்டுதோறும் அவர்களுக்கு அளிக்கப்படும் பதவிகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது என்பதையும் அம்பேத்கார் புள்ளி விபரங்களுடன் சபையில் எடுத்துச் சொல்லி, மேலும் கூறியதாவது:—

"தீண்டாமை ஒழிப்புக்கான பிரச்சாரம் முக்கியமானது; ஜாதி இந்துக்களிடையே காணப்படும் மனமயக்கத்தைப் போக்க பிரச்சாரம் நடைபெற வேண்டும். அவர்களிலே சிலர், மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய அளவு மனமயக்கம் கொண்டுள்ளார்கள்.

"நமது நாட்டிலே உள்ள மறுமலர்ச்சி எண்ணம் கொண்ட வேலையின்றித் திரியும் வாலிபர்களை வேலைக்கமர்த்தி, அவர்களிடம் சில கிராமங்களைப் பிரித்துக் கொடுத்துப் பிரச்சாரம் செய்யுமாறு கூறுங்கள்.

"தீண்டாமை, நாட்டிற்கே ஒரு அவமானச் சின்னமாக விளங்குகிறது என்பதை எடுத்துச் சொல்லுங்கள்."

"பண்டித நேருவே தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினையை அலட்சியப்படுத்துகிறார்" என்று அம்பேத்கார் குற்றம் சாட்டினார். தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"பண்டித நேருவைப் பற்றிய நினைவு எனக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுக்கிறது; அவர், இப்பிரச்சினையில், கொஞ்சமேனும் ஆர்வம் காட்டவில்லை. காந்தியார், தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினைக்கு உயிரையும் கொடுக்கத் தயாராக இருந்ததைப் பற்றி மிகவும் கண்டித்து, பண்டித நேரு தனது சுயசரிதையில் எழுதியிருக்கிறார். ஆனால் பதவிக்கு வந்ததும், அவர் மனம் மாறிவிடும் என்று எண்ணினேன்; மனமாற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. 1952-ல், தாழ்த்தப்பட்டோர் மாநாடு ஒன்றிற்கு ஜெகஜீவன்ராமைத் தலைவராகவும், பண்டித நேருவை திறப்பாளராகவும் அழைத்திருந்தோம்; தன்னால் வரமுடியாது என்று பிரதமர் மறுக்கும் முறையில், தீண்டப்படாத மக்கள் பிரச்சினை ஒன்று இருப்பதாகத் தன்னால் காண முடியவில்லை என்று கூறிவிட்டார்.

உள்ளவர்கள் — இல்லாதவர்கள் என்ற பிரச்சினைதான் நாட்டிலே இருக்கிறதென்றும், தீண்டப்படாதோர் பிரச்சினை இதில் ஒரு பகுதிதான் என்றும், ஆகவே இப்பிரச்சினையின் மீது தனியாகக் கவனம் செலுத்துவது அவசியம் இல்லை என்றும் கூறிவிட்டார்.

தாழ்த்தப்பட்டோரின் பிரச்சினையில், 'குளிர்ந்த நீரை ஊற்றி', அதனை மறைக்கும் போக்கு, பிரதம மந்திரியிடமே காணப்படுகிறதென்றால், இப்பிரச்சினைக்காகப் பாடுபடும் மற்றவர்களிடமிருந்து எவ்வாறு ஊக்கத்தை எதிர்பார்க்க முடியும்?

நான், தீண்டாமை ஒழியுமென்று நினைக்கவில்லை; அது ஒழிவதற்குப் பல ஆண்டுகளாகலாம்; ஆனால், நாம் இந்த இழிநிலையை எதிர்த்துப் போராடி, மன மயக்கம் கொண்டவர்களைத் தெளிவு பெறச் செய்து, தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக, அரசியல், பொருளாதார உரிமைகளைக் காக்க உறுதியுடன் போராட வேண்டியது மிகவும் அவசியமாகும்."

பிரசுரிப்பு: [illegible] அச்சகம் தோழர் இரா. இளஞ்செழியன், எம். ஏ., அவர்களால், [illegible] அச்சகத்தில் அச்சிட்டு [illegible] (நீ. [illegible] இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: [illegible]